## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.113/2012

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா, அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு மார்ச் மாதம் 03 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜெயபால் | மதம் | : இந்து |
| த/பெ | : முனுசாமி ரெட்டி | ஜாதி | : -- |
| வயது | : 84 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் | : வியாபாரம் | வட்டம் | : திருத்தணி |

**03.03.2026**
**பி.வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் பிரதிவாதி ஆவேன். பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். ஏற்கனவே வாதியை என் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும்போது 23.07.2002ம் தேதியிட்ட கிரைய ஆவணம் **பி.வா.சா.ஆ 1** ஆகவும் 20.07.2009ம் தேதியிட்ட பிழைத்திருத்தல் பத்திரம் **பி.வா.சா.ஆ 2** ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 20.03.1997ம் தேதியிட்டு ராமசாமி முதலிக்கு ஏகல வீராசாமி வகையறா எழுதி கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. 23.04.2010ம் தேதியிட்டு கல்யாண சுந்தரம் எனக்கு எழுதி கொடுத்த சம்மத ஆவணம் தாக்கல் செய்கிறேன். **(சம்மத ஆவணம் பி.வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அ.வ.எண்.113/2012ன் பிராது உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். **(பிராது பி.வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அசல் வழக்கு

எண்.123/2012ல் வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். **(நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ 6 ஆகவும் நில அளவையர் அறிக்கை நீ.ம.சா.ஆ 7 ஆகவும் வரைபடம் நீ.ம.சா.ஆ 8 மற்றும் நீ.ம.சா.ஆ 9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)** அ.வ.எண்.113/2012ஐ தள்ளுபடி செய்ய வேண்டுமாயும் அ.வ.எண்.123/2012ஐ தீர்ப்பு செய்ய வேண்டுமாயும் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)